**STARTING TIME 02.31 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. R. Suresh Babu, Assistant of this court, on 23.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **அமுதவள்ளி** Husband's Name : **சதாசிவம்**

Address :

Calling : Age :

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

16. எனது தாயார் என் பெயருக்கு பி.வா.சா.ஆ–6 செட்டில்மெண்ட் ஆவணத்தில் பாலசுப்பிரமணியம் மற்றும் மின்னலான் என்ற இருவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், சரிதான், அதில் பாலசுப்பிரமணியம் என் தகப்பனார் ஆவார். என் தாயாரின் காலத்திற்கு பிறகு தாவா சொத்துக்களை 3 சமபாகங்களாக பிரிக்க வேண்டி உள்ளது என்றால், எனது தாயார் உயிருடன் இருந்த போதே 3 பேருக்கும் சொத்துக்களை தனித்தனியாக கொடுத்துவிட்டார், எனவே பாகம் பிரிக்க வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை. அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், என் பெயரில் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேன்.

17. மூன்று பேருக்கும் பாகம் பிரிக்க வேண்டிய சொத்துக்களை தான், பாகம் பிரிக்காமல் 2015–ம் ஆண்டு நான் மட்டும் முறைகேடாக மொத்த சொத்தையும்

விற்பனை செய்தேன் என்றால், என் தாயார் என் பெயருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்துக்களை தான் விற்றேன். நான் செய்த விற்பனை பத்திரங்கள் வாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. அதே போல் என்னிடம் இருந்து கிரயம் பெற்ற பிரதிவாதிகளுக்கு, தாவா சொத்தில் எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால், சரியல்ல.

18. எனது தகப்பனார் மற்றும் தாயாருக்கு சொந்தமாக வேறு சில சொத்துக்கள் இன்னும் பாகம் பிரிக்காமல் உள்ளது என்றும், அதனால் தான் நான் விற்பனை செய்த சொத்துக்களைப் பொறுத்து மட்டும் விளம்புகை பரிகாரம் மற்றும் பாகப்பிரிவினை கேட்டு வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்கள் மட்டும் தான் உள்ளது, தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு அவரது தாய் வீட்டில் இருந்து வந்த சொத்துக்கள் ஆகும். எனவே இவ்வழக்கில் மற்ற சொத்துக்களை உள்நோக்கத்துடன் சேர்க்காமல் விடப்பட்டுள்ளது என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. எனவே வாதி வழக்கை கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

3, 5 முதல் 7 தரப்பு பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 02.46.P.M.**

(Sd/-. G. Yuvaraj)
Special Subordinate Judge,
Special Sub Court for L.A.O.P. Cases,
Arakkonam.